# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2332/03 - 2023 මැයි මස 15 වැනි සඳුදා - 2023.05.15

*2332/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 11/80 (32)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2023, ஏப்பிறல் 28.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2024 ஆம் ஆண்டு முதலாவது மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருந்தாலொழிய, மனித நுகர்வின் நோக்கங்களுக்காக அயடீன் கலந்த உணவுத் தர உப்பு தவிர்ந்த உணவின் ஆக்கக்கூறு ஒன்றாக மற்றும் உணவின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் உப்பு உட்பட ஏதேனும் வகையினதான உணவுத் தர உப்பினை ஆளெவரும் உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, விற்பனைக்காக களஞ்சியப்படுத்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்காக முன்வைத்தலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ அல்லது வைத்திருத்தலோ, கொண்டு செல்லுதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.


1A - PG 6321 — 4506 (2023/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பாகம் I

**அயடீன் கலக்காத உணவுத் தர உப்பு**

3. (1) (அ) உப்பளங்களில் அயடீன் கலக்காத உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்யும், களஞ்சியப்படுத்தும் மற்றும் உப்பளங்களிலிருந்து அயடீன் கலக்காத உணவுத் தர உப்பைக் கொண்டு செல்லும் ;

(ஆ) 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 119 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்களில் மருத்துவ தொழிலர் ஒருவரால் வழங்கப்பட்ட மருந்துச்சீட்டின் மீது, கொள்கலன் ஒன்றில் நூறு கிராமை (100கி) விஞ்சாததும், சிறிய கொள்கலன்களில் உள்ளதுமான அயடீன் கலக்காத உணவுத் தர உப்பினை விற்பனை செய்யும் ; அத்துடன்

(இ) கைத்தொழில் நோக்கங்களுக்காக ஏதேனும் அயடீன் கலக்காத உப்பினை அல்லது பொதுவான உப்பினை இறக்குமதி செய்யும், கொண்டு செல்லும், களஞ்சியப்படுத்தும் அல்லது பயன்படுத்தும்,

ஒவ்வொரு ஆளும் அதற்காகச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் மீது பணிப்பாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழுக்கான விண்ணப்பம் ஒன்று -

(அ) பொருளளவில் இதற்கான I ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளரினால் அந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்படக்கூடியவாறான இயைபான எல்லா ஆவணங்களுடனும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) (அ) பணிப்பாளர் உப ஒழுங்குவிதி (4) இற்கிணங்க பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம் ;

(ஆ) பணிப்பாளர் பதிவுசெய்ய மறுக்குமிடத்து, அம்மறுப்பு பற்றிய அறிவித்தல் அதற்கான குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் சேர்த்து, விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(4) பதிவுச்சான்றிதழ் ஒன்று -

(அ) உப ஒழுங்குவிதி (1) இன் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக பொருளளவில் இதற்கான II ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) உப ஒழுங்குவிதி (1) இன் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக பொருளளவில் இதற்கான III ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) பதிவுச் சான்றிதழ் முன்னரே இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது இல்லாததாக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓர் ஆண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாயிருத்தலுடன் அதில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தலும் வேண்டும்.

(5) உப ஒழுங்குவிதிகள் (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று -

(அ) இதற்கான I ஆம் அட்டவணையில் தரப்பட்ட அதே படிவத்தில், நடைமுறைப் பதிவுச்சான்றிதழ் முடிவடைவதற்கு முன்னர் தொண்ணூறு நாட்களுக்கு முன்னர் (90 நாட்கள்) செய்யப்படல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளரினால் அந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(6) பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தலானது பணிப்பாளரினால் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் செய்யப்படல் வேண்டும்.

4. அயடீன் கலக்காத (உண்ணத்தகு) உணவுத் தர உப்பு -

(அ) வெள்ளை அல்லது பழுப்பு வெள்ளை நிறத்திலும் அத்துடன் களிமண், கழிவுக்கல், சிப்பிகள் மற்றும் வேறு வெறிப்புற அத்தகைய பொருட்கள் போன்ற புலனாகக்கூடிய மாசுக்கள் இல்லாததாகவும் ; அத்துடன்

(ஆ) குறுமணல் வடிவத்திலோ அல்லது தூள் வடிவத்திலோ இருத்தலும் வேண்டும்.

ஆயினும் வழங்கப்பட்ட தூள் வடிவமானது, உணவு மதியுரைக் குழுவின் விதப்புரையின் மீது பிரதான உணவு அதிகாரியினால் (இதனகத்துப் பின்னர் "பிரதான உணவு அதிகாரி (C.F.A.) எனக் குறிப்பீடு செய்யப்படும்) எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட சிலிக்கன் ஈரொட்சைட் (INS - 551) அல்லது வேறு எந்த கட்டியாதல் எதிர் சேர்ப்புகளைக் கொண்டிருக்கலாம்.

5. அயடீன் கலக்காத உணவுத் தர உப்பு -

(அ) கிலோகிராம் ஒன்றிற்கு 0.5 மில்லி கிராம்கள் (0.5mg/kg) ஆர்சனிக் (As) ;
(ஆ) கிலோகிராம்கள் ஒன்றிற்கு 0.5 மில்லி கிராம்கள் (0.5mg/kg) கட்மியம் (Cd) ;
(இ) கிலோகிராம் ஒன்றிற்கு 2 மில்லிகிராம்கள் (2mg/kg) ஈயம் (Pb) ; மற்றும்
(ஈ) கிலோகிராம் ஒன்றிற்கு 0.1 மில்லி கிராம்கள் (0.1mg/kg) இரசம் (Hg)
என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.

6. அயடீன் கலக்காத தூள்வடிவத்தில் உள்ள உணவுத் தர உப்பு -

(அ) (i) 0.5 சதவீத (0.5%) m/m ஈரப்பதன் ;
(ii) உலர் அடிப்படையில் 0.5 சதவீத (0.5%) m/m நீரில் கரையத்தகா பொருள் ;
என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.

(ஆ) உலர் அடிப்படையில், சோடியம் (Nacl) குளோரைட் தொண்ணூற்று எட்டு சதவீதத்திற்கு (98%) m/m குறையாமல் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஒரு மில்லிமீற்றர் (1.0 மி.மீ) (பீ.எஸ் - 16) துவாரம் உடைய சல்லடையினூடாக ஆகக்குறைந்தது தொண்ணூற்றைந்து சதவீத (95%) (m/m) ஊடு செலுத்தப்படக்கூடிய திறனைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

7. அயடீன் கலக்காத குறுணல் வடிவிலுள்ள உணவுத் தர உப்பு -

(அ) (i) 6 சதவீத (6.0%) m/m ஈரப்பதன் ; அத்துடன்
(ii) உலர் அடிப்படையில் 1 சதவீத (1%) m/m நீரில் கரையத்தகா பொருள் ;
என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.

(ஆ) உலர் அடிப்படையில், சோடியம் குளோரைட் (Nacl) தொண்ணூற்றேழு சதவீதத்திற்கு (97%) m/m குறையாமல் கொண்டிருத்தல் வேண்டும் ;

## பாகம் II

### அயடின் கலந்த உணவுத் தர உப்பு

8. (1) ஆளெவரும் அதற்காகச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் மீது பணிப்பாளரால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்று இன்றி அயடீன் கலந்த உணவுத் தர உப்பை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, களஞ்சியப்படுத்துதலோ, பொதியிடுதலோ அல்லது கொண்டு செல்லுதலோ ஆகாது.

(2) ஓராம் உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒன்று -

(அ) பொருளளவில் இதற்கான IV ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) பணிப்பாளரினால் அந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்படக் கூடியவாறான ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும் ;

(3) (அ) பணிப்பாளர் உப ஒழுங்குவிதி (4) இற்கிணங்க பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம் ;

(ஆ) பணிப்பாளர் பதிவுசெய்ய மறுக்குமிடத்து அம்மறுப்பு பற்றிய அறிவித்தல், அதற்கான குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் சேர்த்து விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளரினால் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழ் -

(அ) பொருளளவில் இதற்கான V ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பதிவுச்சான்றிதழ் முன்னரே இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது இல்லாததாக்கப்பட்டிருந்தாலொழிய அத்தகைய சான்றிதழின் வழங்கல் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

(5) பதிவுச்சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று -

(அ) இதற்கான IV ஆம் அட்டவணையில் தரப்பட்ட அதே படிவத்தில் தற்போதைய பதிவுச்சான்றிதழ் முடிவடைவதற்கு தொண்ணூறு நாட்களுக்கு (90 நாட்கள்) முன்னர் செய்யப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளரினால் அந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்படக் கூடியவாறான ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(6) பதிவுச்சான்றிதழை புதுப்பித்தலானது பணிப்பாளரினால் பதிவுசெய்யப்பட்ட பதிவுச்சான்றிதழ் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் செய்யப்படல் வேண்டும்.

9. பதிவுச்சான்றிதழை வைத்திருப்பவர் -

(அ) அத்தகைய செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் யாவற்றிலும் ; அத்துடன்
(ஆ) அனைத்து உற்பத்திப் பொருட்களின் சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் மீதும்.

பதிவு இலக்கம், அவரது பெயர் மற்றும் முகவரி என்பவற்றை துலாம்பரமாக வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

10. அயடீன் கலந்த உணவுத் தர உப்பு, அதற்குச் சேர்க்கப்படும் பொற்றாசியம் அயடேட்டு இதற்கான VI ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுடன் இணங்கியொழுகும் போது அந்த உப்பு உண்ணத்தக்க உணவுத் தர உப்பு ஆதல் வேண்டும்.

எவ்வாறாயினும், உணவு மதியுரைக்குழுவின் விதப்புரை மீது பிரதான உணவு அதிகாரி (C.F.A.), பொது சுகாதார முக்கியத்துவமுடையதாக இருக்க வேண்டியதென கருதப்படுகின்றதான விதந்துரைக்கப்பட்ட அளவுகளில் வேறு வலுவூட்டிகளைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கலாம். தூள் வடிவ உப்பானது சிலிக்கன் ஈரொக்சைட்டு (INS 551) உணவு மதியுரைக்குழுவின் விதப்புரை மீது பிரதான உணவு அதிகாரி (C.F.A.) இனால் அங்கீகரிக்கப்பட்ட கட்டியாதல் எதிர் சேர்ப்புக்களை அல்லது வேறு ஏதாவது சேர்ப்புகளைக் கொண்டிருக்கலாம்.

11. அயடீன் கலந்த உணவுத் தர உப்பு -

(அ) கிலோகிராம் ஒன்றிற்கு 0.5 மில்லி கிராம்கள் (0.5mg/kg) ஆர்சனிக் (As) ;
(ஆ) கிலோகிராம் ஒன்றிற்கு 0.5 மில்லி கிராம்கள் (0.5mg/kg) கட்மியம் (Cd) ;
(இ) கிலோகிராம் ஒன்றிற்கு இரண்டு மில்லி கிராம்கள் (2mg/kg) ஈயம் (Pb) ;
(ஈ) கிலோகிராம் ஒன்றிற்கு 0.1 மில்லி கிராம்கள் (0.1mg/kg) இரசம் (Hg)
என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.

12. தூள் வடிவத்திலுள்ள அயடீன் கலந்த உணவுத் தர உப்பு -

(அ) (i) 0.5 சதவீத (0.5%) m/m ஈரப்பதன் ; அத்துடன்
(ii) உலர் அடிப்படையில் 0.5 சதவீத (0.5%) m/m நீரில் கரையத்தகா பொருள் ;

என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.

(ஆ) உலர் அடிப்படையில், சோடியம் குளோரைட் (Nacl) தொண்ணூற்று எட்டு சதவீதம் (98%) m/m இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

(இ) ஒரு மில்லிமீற்றர் (1 மி.மீ) (BS - 16) துவாரம் உடைய சல்லடையொன்றினூடாக ஆகக்குறைந்தது தொண்ணூற்றைந்து சதவீதம் (95% மி. மீ) ஆனவை ஊடு செலுத்தப்படக்கூடிய திறனைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உலர் அடிப்படையில், சோடியம் குளோரைட் (Nacl) தவிர்ந்த வேறு நீரில் கரையத்தக்க ஒரு சதவீத (1.0%) m/m பொருளுக்கு மேற்படுதலாகாது ; அத்துடன்

(உ) உலர் அடிப்படையில், அயடீன் (I), சில்லறை மட்டத்தில் ஒரு கிலோகிராமிற்கு பதினைந்து மில்லிகிராம்களுக்கு (15 மி.கி/1 கி.கி) இற்கு குறையாமலும், உற்பத்தி செய்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற மட்டங்களில் அயடீன் (I) ஒரு கிலோகிராமிற்கு முப்பத்தைந்து மில்லிகிராமிற்கு (35 மி.கி/1 கி.கி) மேற்படாதுமிருத்தல் வேண்டும் ;

13. குறுணல் வடிவத்திலுள்ள அயடீன் கலந்த உணவுத் தர உப்பு -

(அ) (i) 6 சதவீதம் (6%) m/m ஈரப்பதன் ;
(ii) உலர் அடிப்படையில் 0.5 சதவீதம் (0.5%) m/m நீரில் கரையத்தகா பொருள் ; அத்துடன் என்பவற்றுக்கு மேற்படுதலாகாது.
(iii) உலர் அடிப்படையில், சோடியம் குளோரைட்டு (Nacl) தவிர்ந்த வேறு நீரில் கரையத்தக்க பொருள் இரண்டு சதவீதம் m/m (2.0%) என்பவற்றுக்கு மேற்படலாகாது.

(ஆ) உலர் அடிப்படையில், சோடியம் குளோரைட்டு (Nacl) தொண்ணூற்றேழு சதவீத (97%) m/m குறையாமலிருத்தல் வேண்டும் ;

(இ) உலர் அடிப்படையில், அயடீன் (I), சில்லறை மட்டத்தில் ஒரு கிலோகிராமிற்கு பதினைந்து மில்லிகிராம்களுக்கு (15 மி.கி/1 கி.கி) இற்கு குறையாமலும், உற்பத்தி செய்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற மட்டங்களில் அயடீன் (I) ஒரு கிலோகிராமிற்கு முப்பத்தைந்து மில்லிகிராமிற்கு (35 மி.கி/1 கி.கி) மேற்படாதுமிருத்தல் வேண்டும் ;

(ஈ) நிறைப்படி ஆகக்குறைந்தது எண்பது சதவீதமானது (80%) 4.75 மில்லி மீற்றர்கள் (4.75) மி. மீ (BS - 4) துவாரம் உடைய சல்லடையொன்றினூடாக ஊடு செலுத்தப்படக்கூடிய திறனைக் கொண்டதாகவும் அத்துடன் தொண்ணூற்றைந்து சதவீதமானது (95%) ஆனது ஒரு மில்லிமீற்றர் (1மி. மீ) (BS - 16) துவாரம் உடைய சல்லடையொன்றினூடாக ஊடு செலுத்துகின்றபோது வைத்திருத்தலும் வேண்டும்.

பாகம் III

**பொது**

14. உணவுத் தர உப்பானது (அயடீன் கலந்த மற்றும் அயடீன் கலக்காத) உள்மறைப்பில்லாத உணவுத் தர காற்றுபுகாத பொதிகளில் அல்லது கொள்கலன்களில் பொதியிடப்படுதல் வேண்டும், என்பதுடன் பொதியிடற் பொருள் பிளாஸ்டிக் ஆக இருக்கும்போது, அத்தகைய பொதியிடல் பொருளின் தடிப்பானது 75 மைக்ரோ மீற்றர்களைவிட குறைவாக இருத்தலாகாது ;

ஆயின் எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதியானது மேசையில் வைத்துத் தெளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கொள்கலன்களிலுள்ள சுயாதீனமாகச் செல்லக்கூடிய தூள் வடிவ அயடீன் கலந்த உணவுத் தர உப்புக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

15. (1) உணவுத் தர உப்பைக் கொண்டுள்ள ஏதேனும் பொதியின் சுட்டுத்துண்டில் விடயத்திற்கேற்ப "உணவுத் தர உப்புக் குறுணல்" அல்லது "உணவுத் தர உப்புத்தூள்" என உற்பத்திப் பொருளின் பொதுவான பெயரை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அடையாளமிடுதல் வேண்டும்.

(2) அயடீன் கலந்த உணவுத் தர உப்பைக் கொண்டுள்ள ஏதேனும் பொதியின் சுட்டுத்துண்டின் பிரதான முகப்பில் பின்வருவன சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அழிக்கமுடியாத வகையிலும் வாசிக்கத்தக்க வகையிலும் அடையாளமிடப்பட்டோ அல்லது அச்சடிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும் :-

(அ) விடயத்திற்கேற்ப உற்பத்திப் பொருளின் பொதுப்பெயராக "அயடீன் கலந்த உணவுத் தர உப்புக் குறுணல்" அல்லது "அயடீன் கலந்த உணவுத் தர உப்புத்தூள்" ;
(ஆ) "கழுவாமல் உபயோகிக்கவும்" ; அத்துடன்
(இ) "சூரிய வெளிச்சமுள்ள மற்றும் வெப்பமான இடங்களில் வைக்க வேண்டாம்".

16. இதற்கான VII ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கும் அதனது புதுப்பித்தலுக்கும் இயைபான கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

17. 2005 ஆம் ஆண்டின் ஒகத்து மாதம் 11 ஆந் திகதிய 1405/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடின்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

பாகம் IV

**பொருள்கோடல்**

18. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி,

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச்சட்டம் எனப் பொருள்படும் ;

"பிரதான உணவு அதிகாரி" அச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவாறான சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"பொதுவான உப்பு" என்பது, கடல் நீரை ஆவியாக்குவதன் மூலமும் அதனது மாசுக்களை கழுவுவதன் மூலமும் பெறப்பட்டதும், களிமண், கழிவுக்கல், சிப்பிகள் மற்றும் வேறு வெளிப்புற பொருட்கள் போன்ற புலனாகக் கூடிய மாசுக்கள் இல்லாததும், நிறத்தில் வெள்ளை அல்லது பளுப்புவெள்ளை நிறத்தைக் கொண்டதும், உலர்பொருள் அடிப்படை நிறையில் (97%) தொண்ணூற்றி ஏழு சதவீதத்திற்கு குறையாத சோடியம் குளோரைட்டைக் கொண்டதுமான உப்பின் வடிவம் எனப் பொருள்படும்.

"பணிப்பாளர்" என்பது, பிரதான உணவு அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர் எனப் பொருள்படும்.

"உணவு மதியுரைக் குழு" என்பது, சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உணவு மதியுரைக்குழு எனப் பொருள்படும் ;

"மருத்துவத் தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன்

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு ஒன்றை உள்ளடக்குகின்றது.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 3(2)(அ)3(5)(அ))

**உப்பளங்களில் அயடீன் கலக்காத உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்வதற்காகவும் களஞ்சியப்படுத்துவதற்காகவும் கைத்தொழில் நோக்கங்களுக்காக/மருந்தகங்களில் உணவுத் தர உப்பினை மற்றும் உப்பினை இறக்குமதி செய்வதற்காகவும் அல்லது பயன்படுத்துவதற்கான பதிவுச்சான்றிதழ் ஒன்றுக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..................................................
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ..................................................
2. பதவிப் பெயர் :- ..................................................
3. முகவரி :- ..................................................
   தொலைபேசி இல. :- .......................... மின்னஞ்சல் முகவரி :- ..........................
4. விண்ணப்பத்துக்கான நோக்கம் :-
   (தயவுசெய்து வாசித்து இயைபான இலக்கத்திற்கு சரி ( ✓ ) என்ற அடையாளம் இடவும்).
   (i) உப்பளங்களில் உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்தல்
   (ii) உணவுத் தர சாதாரண உப்பினை இறக்குமதி செய்தல், கொண்டு செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
   (iii) உப்பளங்களில் உணவுத் தர உப்பினை களஞ்சியப்படுத்தல்
   (iv) கைத்தொழில் நோக்கங்களுக்காக உணவுத் தர உப்பினை பயன்படுத்துதல்
   (v) உணவுத் தர சாதாரண உப்பினை மருத்துவ விபரணத்தின் மீது உணவுத் தர உப்பின் சில்லறை விற்பனை
5. A. வகை/கைத்தொழில்/மருந்தக பெயர் : ..................................................
   B. கைத்தொழில்/களஞ்சியம் இருக்கும் இடத்தின் முகவரி : ..................................................
6. வியாபாரம்/கம்பெனி பதிவு இல. : ..................................................
   (பதிவுச் சான்றிதழின் நிழற்படப் பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்.)
7. வியாபாரத்தின் தன்மை :- அரசாங்க/தனியார்/பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனி
8. உற்பத்திப் பொருளின் வணிகப்பெயர் (பெயர்கள்) :..................................................
9. கம்பெனியின் பெயரும் முகவரியும் :..................................................
10. சொந்தக்காரர்கள்/பணிப்பாளர் சபையின் பெயர் மற்றும் முகவரி :..................................................
    ..................................................
    ..................................................

11. பதிவு இலக்கம் மற்றும் திகதி (ஏதேனுமிருப்பின்) :.......................................................................................................
12. வருடாந்த உற்பத்தி இயலளவு (மெ. தொ.) :.....................................................................................................
13. உற்பத்தி செய்யப்பட்ட/விற்பனை செய்யப்பட்ட உற்பத்திப் பொருளின் பெயர் :..........................................................
.........................................................................................................................................................
14. உற்பத்திப் பொருளின் ஆக்கக்கூறாக பயன்படுத்தப்படும் உணவுத் தர உப்பின் சதவீதம் :-...............................
.........................................................................................................................................................
15. அயடீன் கலந்த உப்பு பயன்படுத்துவதற்கான தேவையில்லை அல்லது பயன்படுத்தப்படக் கூடாது என்பதற்கான காரணங்கள்:
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
16. உணவுத் தர உப்பின் மதிப்பிடப்பட்ட ஆண்டுக்கான தேவைப்பாடு :- ........................................................
.........................................................................................................................................................
17. கொடுக்கப்பட்ட நேரத்தில் உணவுத் தர உப்பின் எதிர்பார்க்கப்பட்ட இருப்புத் தொகை :- ....................................
.........................................................................................................................................................

.........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

கம்பனி இலச்சினை

திகதி :-.........................................................

---

அலுவலகப் பாவனைக்கு மட்டும்.
பதிவுக்கட்டணம் (அலுவலகப் பாவனைக்கு)

ரூபா ......................................................... பற்றுச்சீட்டு இல. ......................................................... திகதி .............................................

**உணவு மற்றும் அவுடதங்கள் பரிசோதகரின் சான்றுப்படுத்துகை :**

1. விண்ணப்பதாரி மேலே உள்ள கைத்தொழிலை கொண்டு நடாத்துகின்ற வளவுகளை நான் முறையாகப் பரிசோதித்து அவரது வெளிப்படுத்தல்களை சரிபார்த்தும் உள்ளேன்.
2. விண்ணப்பதாரியினால் கொடுத்துதவப்பட்ட வெளிப்படுத்தல்கள் உண்மையானவையாகவும் மிகவும் சரியானவையாகவும் உள்ளன.
3. விண்ணப்பதாரி அவரது/அவளது கைத்தொழிலின் வெற்றிகரமான தொழிற்பாட்டிற் ..................................... மாதங்களுக்கு உணவுத் தர உப்பின் சாதாரண உப்பின் ......................................................... கிலோ கிராம்களை தேவைப்படுத்துகின்றார்.
4. குறிப்புகள் :-

உணவு மற்றும் அவுடதங்கள் பரிசோதகர்.

அலுவலக இலச்சினை.

திகதி :.........................................................

**உதவிப் பணிப்பாளரின் விதப்புரை (உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)**

விதந்துரைக்கப்பட்டது/விதந்துரைக்கப்படவில்லை.

உதவிப் பணிப்பாளர் (உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)

திகதி :.........................................................

**பணிப்பாளரின் அங்கீகாரம் (உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)**

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை.

உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

திகதி :.........................................................

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3(4)(அ)

**உப்பளங்களில் அயடீன் கலக்காத உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்துவதற்கான பதிவுச் சான்றிதழ்**

பதிவு இல : ................................. பதிவுத் திகதி : .................................

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, கீழே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி உப்பளங்களில் உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்கின்ற /களஞ்சியப்படுத்துகின்ற நோக்கத்திற்காக இத்தால் பதிவு செய்யப்படுகின்றார்.

1. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் : ............................................................................
2. உப்பளங்களின் அமைவிடம் : ............................................................................
3. உப்பளங்களின் மொத்த காணி இடப்பரப்பு (ஏக்கர்கள்) : ............................................................................

நிபந்தனைகள்

1. உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்கின்ற / களஞ்சியப்படுத்துன்ற ஆளெவரும் 2023 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.
2. இப்பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் உற்பத்தி (கிகி) பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.
3. இப்பதிவுச் சான்றிதழ் ........... இலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு (01 செல்லுபடியானதாதல் வேண்டும்.

........................................

உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

## அட்டவணை III

(ஒழுங்குவிதி 3(4)(ஆ)

**கைத்தொழில் நோக்கங்களுக்காக அல்லது பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்களில் விற்பனை செய்வதற்காக அயடீன் கலக்காத உணவுத் தர உப்பினைஉற்பத்தி செய்வதற்கான /இறக்குமதி செய்வதற்கான/கொண்டுசெல்வதற்கான / களஞ்சியப்படுத்துவதற்கான பதிவுச்சான்றிதழ்**

..................... இல் வதியும் ........................... இலக்க தேசிய அடையான இலக்கத்தைக் கொண்டுள்ள ....................... இல் அமைந்துள்ள ............................ பெயரைக்கொண்ட கைத்தொழில் /மருந்தகத்தின் .................... என்பவராக உள்ள திரு. /திருமதி/ செல்வி .................... என்பவருக்கு மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அவன் / அவளது கைத்தொழில் / மருந்தகம் சம்மந்தமாக பயன்படுத்தவதற்கு ஏதேனும் வழங்கப்பட்ட நேரத்தில் அயடின் கலக்காத உணவுத் தர உப்பின் ..................... கிலோகிராம்களை கொள்வனவு செய்வதற்கு / இறக்குமதி செய்வதற்கு / கொண்டு செல்வதற்கு / விற்பனை செய்வதற்கு மற்றும் அயடின் கலக்காத உணவுத் தர சாதாரண கறியுப்பின் ..................... கிலோகிராம்களை களஞ்சியப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டின் .................. மாதம் .................... ஆந் திகதிய ................... ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

இச்சான்றிதழ் ............. ஆண்டு ............... மாதம் ................ ஆந் திகதியிலிருந்து ஓர் ஆண்டு (01) காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாகும்.

உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

திகதி :

**குறிப்பு :**

1. உணவுத் தர உப்பின் சொல்லப்பட்ட தொகையினை வழங்குகின்ற எவரேனும் உப்பு உற்பத்தியாளர் அழிக்க முடியாத வகையில் இயைபான சான்றிதழின் உட்பகுதிமீது சான்றிதழை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட உணவுத் தர உப்பின் தொகையைக் குறித்துக் காட்டுதல் வேண்டும் என்பதுடன் வழங்கிய திகதியினையும் குறித்துக்காட்டுதலும் வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தர உப்பின் விடயத்தில் சான்றிதழானது, விடுவிப்பின்போது சான்றிதழைச் சரிபார்ப்பதற்கும் உணவுத் தர உப்பின் விடயத்தில் சான்றிதழானது, விடுவிப்பின்போது சான்றிதழைச் சரிபார்ப்பதற்கும் புறக்குறிப்பிடுவதற்குமாக, இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசோதனை அலகில் காண்பிக்கப்படல் வேண்டும்.

2. கொள்வனவு செய்யப்பட்ட /இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் தொகையானது அதே நாளன்று கொண்டுசெல்லப்படாவிட்டால் அந்தப் பயனைக் கொண்டுள்ள புறக்குறிப்பானது உணவுத் தர உப்பை வழங்குகின்ற அமைப்பினால் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உணவு தர உப்பின் விடயத்தில், இறக்குமதி செய்யப்பட்ட உணவைப் பரிசோதனை செய்யும் அலகின் (IFIU) அலுவலரினால் உரிய சான்றிதழின் உட்பகுதிமீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும் அத்தகைய புறக்குறிப்பைக் கொண்டிருக்காத சான்றிதழொன்று கொள்வனவு செய்யப்பட்ட அல்லது துறைமுகத்தில் இருந்து அகற்றப்பட்ட நாள் தவிர்ந்த வேறு நாட்களில் உணவுத் தர உப்பைக் கொண்டுசெல்வதற்கு வலிதுடையதாக இருத்தலாகாது.

(சான்றிதழின் மறுபக்கத்தில்)

**இறக்குமதி செய்யப்பட்ட உணவை பரிசோதனை செய்யும் அலகின் (IFIU) அதிகாரமளிக்கப்பட்ட உப்பு உற்பத்தியாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.**

| பதிவுச் சான்றிதழில் குறித்துரைக் கப்பட்ட உப்பின் தொகை | வழங்கப்பட்ட / இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் தொகை | திகதி | வழங்கப்படும் மீதி | வாகன இலக்கமும் கொண்டு செல்லும் திகதியும் | சேருமிடம் | IFIU இனை வழங்கும் அலுவலரின் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் | அலுவலக இலச்சினை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**அட்டவணை IV**

[ஒழுங்குவிதி *8(2)(அ)*, *8(5)(அ)*]

**அயடீன் கலந்த உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்வதனை /களஞ்சியப்படுத்துவதனை /இறக்குமதி செய்வதனை/ கொண்டு செல்வதனை அல்லது பொதியிடுதலை பதிவுசெய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : ..................................................................................................
   தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................................................................
2. பதவிப் பெயர் : ..................................................................................................
3. முகவரி : ..................................................................................................
   தொலபேசி இல : ........................................ மின்னஞ்சல் முகவரி :.....................................
4. விண்ணப்பிப்பதன் நோக்கம் :-
   (தயவுசெய்து வாசித்து இயைபான இலக்கத்திற்கு சரி ( ✓ ) என்ற அடையாளம் இடவும்)

   (i) உணவுத் தர உப்புடன் அயடீன் கலத்தல் ;
   (ii) அயடீன் கலந்த உணவுத் தர உப்பினை பொதி செய்தல் ;
   (iii) அயடீன் கலந்த உணவுத் தர உப்பினை இறக்குமதி செய்தல் ;
   (iv) அயடீன் கலந்த உணவுத் தர உப்பினை களஞ்சியப்படுத்தல் செய்தல்.

5. A. கைத்தொழில் வகை /பெயர் : ..................................................................................
   B. கைத்தொழில் /களஞ்சியம் இருக்கும் இடத்தின் முகவரி : ..................................................
6. வியாபாரப் பதிவு இல. :......................................................................
   (பதிவுச்சான்றிதழின் நிழற்படப்பிரதி ஒன்றினை இணைக்கவும்)
7. வியாபாரத்தின் தன்மை :- அரசாங்க /தனியார் /பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனி.
8. உற்பத்திப்பொருளின் வணிகப்பெயர் /பெயர்கள் : ..............................................................
9. கம்பெனியின் பெயரும் முகவரியும் : ..............................................................

10. சொந்தக்காரர்கள் /பணிப்பானளர்கள் சபையின் பெயரும் முகவரியும் : ..............................................................
..................................................................................................................
..................................................................................................................

11. பதிவு இலக்கமும் திகதியும் (ஏதேனுமிருப்பின்) : ..............................................................

12. வருடாந்த உற்பத்தி இயலளவு (மெதொ) : ..............................................................

..........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ............................

கம்பெனி இலச்சினை

**அலுவலகப் பாவனைக்கு மட்டும்**

பதிவுக்கட்டணம்

ரூபா : ............................ பற்றுச்சீட்டு இல. : ............................ திகதி : ............................

**உணவு மற்றும் ஔடதங்கள் பரிசோதகரின் சான்றுப்படுத்துகை**

1. விண்ணப்பதாரி மேலே உள்ள கைத்தொழிலை கொண்டு நடாத்துகின்ற வளவுகளை நான் முறையாகப் பரிசோதித்து அவரது வெளிப்படுத்தல்களை சரிபார்த்தும் உள்ளேன்.

2. விண்ணப்பதாரியினால் கொடுத்துதவப்பட்ட வெளிப்படுத்தல்கள் உண்மையானவையாகவும் மிகவும் சரியானவையாகவும் உள்ளன.

3. விண்ணப்பதாரி அவரது / அவளது வெற்றிகரமான தொழிற்பாட்டிற்கு ................ மாதங்களுக்கு உணவுத் தர உப்பின் ................ கிலோகிராம்களை பயன்படுத்துகின்றார்.

4. குறிப்பு:

உணவு மற்றும் ஔடதங்கள் பரிசோதகர்.

அலுவலக இலச்சினை

திகதி : ............................

**உதவிப் பணிப்பாளரின் விதப்புரை (உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)**

விதந்துரைக்கப்பட்டது /விதந்துரைக்கப்படவில்லை

உதவிப் பணிப்பாளர்(உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)

திகதி : ............................

**பணிப்பாளரின் அங்கீகாரம் (உணவுக் கட்டுப்பாட்டு நிருவாக அலகு)**

அங்கீகரிக்கப்பட்டது /அங்கீகரிக்கப்படவில்லை.

உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

திகதி : ............................

**அட்டவணை V**

[ஒழுங்குவிதி 8(4)(அ)]

உணவுத் தர உப்புடன் அயடீன் கலப்பதற்கான பதிவுச்சான்றிதழ்

பாகம் I

பதிவு இல : .......................................... பதிவுத் திகதி : ...............................

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, கீழே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி உப்பளங்களில் உணவுத் தர உப்பினை உற்பத்தி செய்யும் / இறக்குமதி செய்யும்/ பொதியிடும்/களஞ்சியப்படுத்துகின்ற நோக்கத்திற்காக இத்தால் பதிவு செய்யப்படுகின்றார்.*

1. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் : ............................................................................
.......................................................................................................................................

2. அயடீன் கலத்தல் வசதிபற்றிய அமைவிடம் : ..........................................................................
.......................................................................................................................................

3. உற்பத்திப் பொருளின் வணிகப் பெயர் /பெயர்கள் : ............................................................................

நிபந்தனைகள்

1. அயடீன் கலந்த உணவுத் தர உப்பை உற்பத்தி செய்கின்ற /இறக்குமதி செய்கின்ற /பொதியிடுகின்ற/களஞ்சியப்படுத்துகின்ற ஆளெவரும் 2023 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

2. இச்சான்றிதழை வைத்திருப்பவர் ஒவ்வொரு தொகுதியின் ஆய்வுகூட அறிக்கைகளின் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

3. இப்பதிவுச்சான்றிதழ் ......................... இலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு (01) செல்லுபடியாதல் வேண்டும்.

........................................
உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

பாகம் II

***அயடீன் கலந்த உணவுத் தர உப்பின் உற்பத்திக்கான /இறக்குமதிக்கான /களஞ்சியப்படுத்தலுக்கான /பொதிசெய்தலுக்கான கொண்டுசெல்லுவதற்கான /எழுத்திலான அனுமதி.***

..................... இல் வதியும் ........................... இலக்க தேசிய அடையாள இலக்கத்தைக் கொண்டுள்ள ....................... இல் அமைந்துள்ள ............................ பெயரைக்கொண்ட கைத்தொழில் .................... என்பவராக உள்ள திரு / திருமதி / செல்வி .................... என்பவருக்கு மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அவன் /அவளது கைத்தொழில் /சம்மந்தமாக பயன்படுத்துவதற்கு ஏதேனும் வழங்கப்பட்ட நேரத்தில் உணவுத் தர உப்பின் ..................... கிலோகிராம்களை கொள்வனவு செய்வதற்கு / இறக்குமதி செய்வதற்கு / கொண்டு செல்வதற்கு /விற்பனை செய்வதற்கு மற்றும் உணவுத் தர உப்பின் ..................... கிலோகிராம்களை களஞ்சியப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டின் .................. மாதம் .................... ஆந்தேதிய ................... ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

இவ் அனுமதிப்பத்திரம் ........................... ஆண்டு .................... மாத .......................... ஆந்தேதியிலிருந்து ஓர் ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாகும்.

உணவுக் கட்டுப்பாடு நிருவாக அலகிற்கு பொறுப்பான பணிப்பாளர்.

திகதி :

குறிப்பு :

1. உணவுத் தர உப்பின் சொல்லப்பட்ட தொகையினை வழங்குகின்ற எவரேனும் உப்பு உற்பத்தியாளர் அழிக்க முடியாத வகையில் இயைபான சான்றிதழின் உட்பகுதிமீது சானிறிதழை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட உணவுத் தர உப்பின் தொகையைக் குறித்துக் காட்டுதல் வேண்டும் என்துடன் வழங்கிய திகதியினையும் குறித்துக்காட்டுதலும் வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தர உப்பின் விடயத்தில் எழுத்திலான சான்றிதழானது, விடுவிப்பின்போது சான்றிதழைச் சரிபார்ப்பதற்கும் புறக்குறிப்பிடுவதற்குமாக, இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசோதனை அலகில் காண்பிக்கப்படல் வேண்டும்.

2. கொள்வனவு செய்யப்பட்ட / இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் தொகையானது அதே நாளன்று கொண்டுசெல்லப்படாது விட்டால் அந்தப் பயனைக் கொண்டுள்ள புறக்குறிப்பானது உணவுத் தர உப்பை வழங்குகின்ற அமைப்பினால் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உணவு தர உப்பின் விடயத்தில், இறக்குமதி செய்யப்பட்ட உணவைப் பரிசோதனை செய்யும் அலகின் IFIU அலுவலரினால் உரிய எழுத்தினாலான சான்றிதழின் உட்பகுதிமீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும் அத்தகைய புறக்குறிப்பைக் கொண்டிருக்காத சான்றிதழொன்று கொள்வனவு செய்யப்பட்ட அல்லது துறைமுகத்தில் இருந்து அகற்றப்பட்ட நாள் தவிர்ந்த வேறு நாட்களில் உணவுத் தர உப்பைக் கொண்டுசெல்வதற்கு வலிதுடையதாக இருத்தலாகாது.

(எழுத்தினாலான அனுமதிப்பத்திரத்தின் மறுபக்கத்தில்)

இறக்குமதி செய்யப்பட்ட உணவை பரிசோதனை செய்யும் அலகின் (IFIU) அதிகாரமளிக்கப்பட்ட உப்பு உற்பத்தியாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

| அனுமதிப்பத் திரத்தில் குறித்துரைக் கப்பட்ட உப்பின் தொகை | வழங்கப்பட்ட / இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் தொகை | திகதி | வழங்கப்படும் மீதி | வாகன இலக்கமும் கொண்டு செல்லும் திகதியும் | சேருமிடம் | IFIU இனை வழங்கும் அலுவலரின் அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் | அலுவலக இலச்சினை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**அட்டவணை** VI

(ஒழுங்குவிதி 10)

உணவுத் தர பொற்றாசியம் அயடைட்டுக்கான தேவைப்பாடுகள்

1. உணவுத் தர பொற்றாசியம் அயடைட்டு ஆனது அசுத்தமற்ற படிகவுருக்கல் தூளாக இருத்தல் வேண்டும் என்பதுடன்

(அ) தொண்ணூற்று ஒன்பது சதவீத (99) m/m பொற்றாசியம் அயடைட்டை ($KIO_3$) விட கூடுதலாகவிருத்தல் வேண்டும்; என்பதுடன்

(ஆ) (i) 0.01 சதவீதம் (0.01) m/m புறோமேற்று, புறோமைட்டு, குளோரேற்று மற்றும் குளோரைட்டு ($Cl^-$);
(ii) 0.02 சதவீதம் (0.002) m/m அயடைட்டு (I);
(iii) கிலோகிராம் ஒன்றிற்கு இரண்டு மில்லிகிராம்கள் (2மிகி /கிகி) ஈயம் (Pb); அத்துடன்
(iv) கிலோகிராம் ஒன்றிற்கு மூன்று மில்லிகிராம்கள் (3மிகி /கிகி) ஆர்சனிக் (As)
என்பவற்றுக்கு மேற்பட கொண்டிருத்தலாகாது.

2. உணவுத் தர பொற்றாசியம் அயடேட்டினை உலர்த்துவதன் மீதான இழப்பு ஆனது 0.5 சதவீதம் (0.5) m/m மற்றும் 5 சதவீதம் (5) m/m ஆகியவற்றுக்கு மேற்படுதலாகாது; உணவுத் தர பொற்றாசியம் அயடேட்றுக் கரைசல் 5.5 - 9.0 பிஎச் (pH) ஐக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை VII

(ஒழுங்குவிதி 16)

கட்டணங்கள்

(1) பின்வரும் கட்டணங்கள் பதிவுச்சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கும் வருடாந்த உற்பத்தி அல்லது பொதியிடல் இயலளவிற்கு இணங்க அதனைப் புதுப்பிப்பதற்குமெனவும் செலுத்தப்படுதல் வேண்டும்.

| வருடாந்த உற்பத்தி அல்லது பொதியிடல் இயலளவு | கட்டணம் |
|---|---|
| 1000 மெற்றிதொன்னும் அத்துடன் அதற்கு கீழும் (மெதொ) | ரூபா 5,000 |
| 1001 மெற்றிக்தொன் (மெ.தொ) தொடக்கம் 5000 மெற்றிக் தொன்வரை (மெதொ) | ரூபா 10,000 |
| 5001 மெற்றிக் தென்னுடன் (மெதொ) அதற்கும் மேலேயும் | ரூபா 25,000 |

(2) மூலப்பிரதி இழக்கப்படடிருப்பின் அல்லது தொலைந்திருப்பின் இரண்டாயிரம் ரூபா (ரூபா 2000) கட்டணம் பதிவுச் சான்றிதழின் இணைப்பிரதி ஒன்றிற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் சான்றிதழின் அத்தகைய பிரதி ஆனது இணைப்பிரதி என்னும் சொற்களை கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 05 - 0108

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.